Source: *Tamil Murasu*, p2
Date: 21 January 2017

# ஒல்லியான நீரிழிவு நோயாளிகள் கல்லீரல் நோயால் மரணமடையும் அபாயம் அதிகம்: ஆய்வு

நீரிழிவு நோயாளிகள் கடுமையான கல்லீரல் நோயால் மரணமடையக் கூடிய அபாயம் அந்நோய் இல்லாதவர்களைவிட மூன்று மடங்கு அதிகம் என 60,000க்கும் மேலான சீன சிங்கப்பூரர்களிடையில் நடத்தப்பட்ட உள்ளூர் ஆய்வு கண்டறிந் துள்ளது.

ஆச்சரியப்படக்கூடிய வகையில், உடல் பருமனான நீரிழிவு நோயாளிகளைவிட ஒல்லியான நீரிழிவு நோயாளிகள் கல்லீரல் கொழுப்பேற்றல் நோயால் மரணமடையும் அபாயம் அதிகம்.

வெள்ளிக்கிழமை நடந்த செய்தியாளர் கூட்டத்தில் ஆய்வின் கண்டுபிடிப்புகள் வெளியிடப்பட்டன.

நீரிழிவு நோயும் உடல் பருமனும் கல்லீரல் கொழுப்பேற்றல் நோயால் பாதிக்கப்படும் அபாயத்தைக் கூட்டும் என்பது உலகறிந்த விவரம். கல்லீரலில் கொழுப்பேறி, தழும்பாக மாறி, கல்லீரலால் சரிவர இயங்க முடியாதபோது நோய் பாதிக்கும்.

"ஆரம்பத்தில் இரட்டிப்பு அபாயமாக இருக்கும் என்று நினைத்தேன். உடல் பருமனான நீரிழிவு நோயாளிகளுக்குக் கூடுதல் அபாயம் இருக்க வேண்டும்," என்றார் ஆய்வின் தலைமை ஆய்வாளரான டியூக்–என்யுஎஸ் மருத்துவப் பள்ளி பேராசிரியர் கோ வூன்–புவே.

"ஆனால் இயல்புக்கு மாறாகவும் என் எதிர்பார்ப்புக்கு முரணாகவும் ஒல்லியானவர்களிடையில் நீரிழிவு நோயால் அபாயம் மேலும் அதிகமாக இருக்கிறது," என்றார் அவர்.

இதற்கான காரணத்தை அறிய மேலும் ஆராய்ச்சி செய்யப்பட வேண்டும்.

கடந்த 1993ம் ஆண்டுக்கும் 1998ம் ஆண்டு வரை சிங்கப்பூரில் வாழ்ந்த நடுத்தர வயது முதல் வயதான சீனர்கள் வரை இடம்பெற்ற சிங்கப்பூர் சீன சுகாதார ஆய்வின் புள்ளி விவரங்களை, 2014 வரையிலான சிங்கப்பூர் பிறப்பு, இறப்புப் பதிவேட்டிலுள்ள விவரங்களுடன் ஆய்வாளர்கள் ஒத்துப் பார்த்தனர். மொத்தம் 5,696 பேருக்கு நீரிழிவு நோய் இருந்தது. அவர்களில் 16 பேர் கல்லீரல் கொழுப்பேற்றல் நோயால் மரணமடைந்தனர்.

நீரிழிவு நோய் இல்லாத, ஆரோக்கியமான உடல் எடைக் குறியீடு (23க்குக் குறைவு) உள்ள ஒருவருடன் ஒப்பிடுகையில், உடல் பருமனான நீரிழிவு நோயாளி கல்லீரல் நோயால் மரணமடையக்கூடிய சாத்தியம் மூன்று மடங்கு அதிகம்.

ஆனால், ஆரோக்கியமான உடல் எடைக் குறியீடு உள்ள நீரிழிவு நோயாளிகள் கல்லீரல் நோயால் மரணமடையக்கூடிய சாத்தியம் 5.5 மடங்கு அதிகம்.

மேற்கத்திய மக்களோடு ஒப்பிடுகையில் சிங்கப்பூரிலும் மற்ற ஆசிய நாடுகளிலும் உடல் எடைக் குறியீடு குறைவாக இருப்பவர்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்படுவதால் ஆய்வின் கண்டுபிடிப்பு முக்கியமானது என்றார் பேராசிரியர் கோ.

ஆய்வின் முதல் ஆசிரியரும் சிங்கப்பூர் பொது மருத்துவ மனையின் இரைப்பை, ஈரல் மருத்துவப் பிரிவின் மருத்துவ ஆலோசகருமான டாக்டர் ஜார்ஜ் கோ, நீரிழிவு நோயுடன் பொதுவாகத் தொடர்புபடுத்தப்படும் இதய நோய், கண் நோய், சிறுநீரக நோய் போன்றவற்றோடு கல்லீரல் நோய்க்கும் நீரிழிவு நோயாளிகள் பரிசோதனை செய்யவேண்டும் என ஆய்வின் கண்டுபிடிப்புகள் காட்டுவதாகக் கூறினார்.

சிங்கப்பூரில் 400,000க்கும் மேலான நீரிழிவு நோயாளிகள் இருப்பதாகக் கணிக்கப்படுகிறது. மதுபானம் காரணமில்லாத கல்லீரல் கொழுப்பேற்றல் நோயின் பாதிப்பும் சிங்கப்பூரில் அதிகரித்து வருவதாகவும் அது வளர்ந்தவர்களில் பாதிப் பேரைப் பாதிக்கக்கூடும் என்றும் சிங்ஹெல்த் மருத்துவர்கள் நடத்திய ஆய்வு காட்டுகிறது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.